1972 ஆகஸ்ட் 23]

மூலமாக முழுக்க முழுக்க வெளிநாடுகளுக்கு மீன் அனுப்ப வேண்டுமென்ற முறையில் சென்னை, தூத்துக்குடி துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்ட பிறகு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

* 282 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டை அகழியில் மீன் வளர்க்க, அதனை விற்க தமிழ்நாடு அரசு மத்திய அரசின் அனுமதி பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) வேலூர் கோட்டை அகழி, 1919-ஆம் ஆண்டிலிருந்து அதாவது 1904-ஆம் ஆண்டு பண்டைச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னம் என்று இக்கோட்டை அறிவிக்கப் படுவதற்கு முன்பே, மாநில மீன்வளத்துறையின் உடைமையாக இருந்து வருகிறது, அதனால் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. அவ்வகழியில் மீன்களை வளர்க்கவோ அல்லது அவற்றை விற்கவோ இந்திய அரசின் அனுமதி பெறப்படவில்லை, அது அவசியமுமில்லை. இவ்வகழியைப்பழுதுபார்ப்பதற்கும் மேம்பாடுகள் செய்வதற்கும் மட்டுமே, இந்திய அரசின் தொல்பொருள் துறையின் இசைவு தேவைப்படும். ஏனெனில், அகழிக்குப் பழுது பார்க்கும் பணியும் மேம்பாடுகள் செய்யும் பணியும் தொல்பொருள் கோட்பாடுகளுக் கிணங்க நிறைவேற்றப்பட வேண்டும்.

Industrial Licences

* 283 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the industrialist J. R. D. Tata who met the Chief Minister as the end of December 1969 at Madras expressed full support to the State's demand that Industrial Licensing powers should be progressively transferred to the State Government ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை, உரிமங்கள் பெறுவதிலும் நிறைவேற்றுவதிலும் உள்ள பல்வேறு இடர்பாடுகளை அவர் தெரிவித்தார்.